**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No.236/2022**
**Prosecution Witness – PW.4**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. தேவ அருள்ராஜ் |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 02.06.2026.
(A1, A4, A5 and A6 are present. A2, A3 and A7 are absent. Petition U/s.355 BNSS have filed and allowed).

முதல் விசாரணை–

நான் கொடுப்பைக்குழி ஊரில் வசிக்கிறேன். Hardwares கடை வைத்திருக்கிறேன். எந்த தேதியில் யார் என்ன பொருள்களை கடையில் வாங்கினார்கள் என்றால், தெரியாது. போலீஸ் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் 20.04.2020 தேதியிட்ட ராணி Traders என்ற பெயரில் உள்ள ரசீது எனது கடைக்கான ரசீது கிடையாது. எனது கடைப் பெயர் வேறு. அந்த ரசீது நான் வழங்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது)

குறுக்கு விசாரணை ( அரசு தரப்பில்)

கடந்த 20.04.2020 தேதியில் முட்டம் ஊராட்சி மன்ற தலைவரான தெபியாஸ் என்பவரின் மகள் குயின்மேரி என்பவர் எனது கடைக்கு வந்து முட்டம் பொன்னந்தோப்பு தெருவில் பொருத்தப்பட்டிருந்த முட்டம் ஊராட்சிக்கு சொந்தமான குடிநீர் இணைப்புக்காக 60 செ.மீ நீளமும் 1 இன்ச் அகலமும் கொண்ட அதனுடன் கூடிய டேப் ஒன்று என மொத்தம் ரூ.1000/–க்கான

இரசீதை நீங்கள் வழங்கிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்றால், இல்லை. என்னுடைய கடைப் பெயரே வேறு. அந்த இரசீது நான் கொடுக்கவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**